மாவட்டப்பதிவாளர் அலுவலகம்

கோயம்புத்தூர்

சார் பதிவாளர் அலுவலகம்
347
17 AUG 2022
அன்னூர் 641 653

**எண். 9180/அ1/2022 நாள்.27.07.2022**

அனுப்பி வைக்கப்படுகிறது.

2) பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் மே.எ.எண் 12454/கே2/2020, நாள்–18.07.2022.உடன் வரப்பெற்ற அரசாணை (3ப) எண்.11 வணிகவரி மற்றும் பதிவு (M2)த் துறை, நாள்–06.07.2022 இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

3) மேற்படி அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரந்த வரும் திருமதி.S.சத்தியபிரியா என்பவருக்கு பணியில் சேர்ந்த நாளான 17.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரண்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

4) தனியரது பணிப் பதிவேட்டில் உரிய குறிப்புகள் மேற்கொள்ள சார்பதிவாளர் கோரப்படுகிறார்.

**இணைப்புடன்.**

27/7

**மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)**
**(உதவிப் பதிவுத்துறைத் தலைவர் நிலை)**
**கோயம்புத்தூர்.**

27/7/22

**பெறுநர் :**
திருமதி.சு.சத்தியபிரியா,
இளநிலை உதவியாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
அன்னூர்.( சார்பதிவாளர் மூலமாக.)

Indvl. copy

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

<u>மே.எ.எண்.12454/கே2/2020 நாள். 18.07.2022</u>

அரசு ஆணை (3ப) எண்.11, வணிகவரி மற்றும் பதிவுத்(M2)துறை, நாள்.06.07.2022 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.சு.சத்தியபிரியா இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள கோயமுத்தூர் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

18/7/2022

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

19/7/22

பெறுநர்
திருமதி.சு.சத்தியபிரியா,
இளநிலை உதவியாளர்,
(கோயமுத்தூர் மாவட்ட பதிவாளர் மூலம்).

நகல்:
1.மாவட்டப் பதிவாளர், கோயமுத்தூர்.
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
3.ஒமுக்கிய ஆணைக்கோப்பு /தனிநகல்-1

திவுத்துறை தலைவர் அலுவலகம்
08 JUL 2022
சென்னை - 600 028.

SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU
சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திருமதி.சு.சத்தியபிரியா - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (3ப) எண்.11**

**நாள் : 06.07.2022**
**சுபகிருது, ஆனி - 22**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எம்)துறை, நாள் 01.08.2018.[
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ) துறை, நாள். 23.01.2020.
3. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018-10, நாள் 04.12.2020.
4. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம்எண்.12454/ கே2/2020, நாள் 18.08.2021.

----------

**ஆணை:**

பதிவுத்துறையில், ஈரோடு பதிவு மாவட்டம், அவல்பூந்தறை சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்தபோது, பணிக்காலத்தினிடையே 16.10.2019 அன்று காலமான திரு.சீ.சௌந்தரராஜன் என்பவரின் மனைவி திருமதி.S.மீனாம்பாள் தமது மகள் திருமதி.சு.சத்தியபிரியா, என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 11.09.2020-ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர்,

திருமதி.சு.சத்தியபிரியா, என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார்.அதன்படி, திருமதி.சு.சத்தியபிரியா, 17.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திருமதி.சு.சத்தியபிரியா, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத்தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், கோயமுத்தூர் பதிவு மாவட்டத்தில், திருமதிச.சு.சத்தியபிரியா, 17.02.2020 முற்பகல் முதல், இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார், மறைந்த அரசு ஊழியரின் திருமணமான மகளான திருமதி.சு.சத்தியபிரியா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2015 பிரிவு 15-ல் மறைந்த அரசு ஊழியரின் திருமணமான மகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை செய்யவில்லை. எனவே, அப்பிரிவினை தனியர் பொருட்டு தளர்வு செய்யவும் தனியருக்கு பணிநியமன நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக மேற்காணும் சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியற்றிற்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 58-ன் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விலக்களித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.சு.சத்தியபிரியா, என்பவருக்கு 17.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 10279/ட்டி1/2022 நாள் 03,06,2022, மற்றும்

மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2222715/G1/2022, நாள் 13.04.2022ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்.

பெறுநர்:
பதிவுத்துறை தலைவர், சென்னை-28.
திருமதி.சு.சத்தியபிரியா, இளநிலை உதவியாளர்,
கோயமுத்தூர் பதிவுமாவட்டம். (பதிவுத்துறை தலைவர் வழியாக)

**நகல்:**
தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

06/07/2022
பிரிவு அலுவலர்.